

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## மார்ச் - 2020

We Are Here..!! To Guide You..!!



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 27.03.2020

We Shine Academy™

guiding you to get through

Main Office @

**WeShine Study Circle**

Chrompet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- வர்த்தக நிகழ்வுகள்

We Shine Academy™








## தமிழக நிகழ்வுகள்

- உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா நோய்த்தொற்று குறித்த அடிப்படைத் தகவல்கள் சிபிஎஸ்இ பிளஸ் 2 பாடநூலில் இடம்பெற்றுள்ளன.
    - **கோவிட்-19 குறித்து கடந்த ஜனவரி மாதத்திலிருந்து நாம் விழிப்புணர்வு பெற்று வரும் நிலையில் அந்த நோய்த்தொற்று குடும்பத்தினால் (கொரோனா) ஏற்படும் நோய்கள் குறித்த தகவல்கள் பிளஸ் 2 உயிரியல் பாடநூலில் இடம்பெற்றுள்ளது.**
    - அதில் கொரோனா நோய்த்தொற்றைத் தடுக்க குறிப்பிட்ட சிகிச்சை முறைகள் என எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.
    - **செய்தி துளிகள்:**
        - கடந்த ஜூன் மாதம் புதிய சிபிஎஸ்இ பாடத்திட்டத்தில் வெளியான
        - பிளஸ் 2 உயிரியல் பாடநூலில் 166-ஆவது பக்கத்தில் நோய்கள் குறித்த தகவல்கள் இடம்பெற்றுள்ளது.

## தேசிய நிகழ்வுகள்

- மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 9 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.
    - மத்திய அரசின் **“கிஷன் சம்மான் நிதி“ திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 6000 ரூபாய் வழங்கப்படும் என்று மத்திய**

**அரசு அறிவிக்கப்பட்டிருந்தது.** ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு தலா ரூ.2,000 வழங்கப்படும்.

- ஜன் தன் யோஜனா திட்டத்தின் கீழ் வங்கிக்கணக்கு வைத்திருக்கும் பெண்களுக்கு அடுத்த 3 மாதத்திற்கு தலா ரூ.500 வழங்கப்படும், போன்ற 9 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.
- **செய்தி துளிகள்:**
    - சீனாவின் வூஹான் நகரிலிருந்து பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் தற்போது உலகையே அச்சுறுத்தி வருகிறது. கொரோனா வைரஸால் உலகம் முழுக்க 21,000 மக்கள் இறந்துள்ளார்கள். கொரோனா நோய்த் தொற்று பரவலைத் தடுப்பதற்காக இந்தியா முழுவதும் 21 நாள் ஊரடங்கு விதிக்கப்பட்டுள்ளது.

- கொரோனா நோய்தொற்று பாதிப்பால் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாகத் தலா **ரூ. 5 லட்சத்தை ஆந்திரா மற்றும் தெலங்கானா மாநிலங்களின் முதல்வர் நிவாரண நிதிக்கு அளிப்பதாக பிரபல பாட்மிண்டன் வீராங்கனை பி.வி. சிந்து கூறியுள்ளார்.**
    - உலகம் முழுக்க 21,000 மக்கள் இறந்துள்ளார்கள். கொரோனா நோய்த் தொற்று பரவலைத் தடுப்பதற்காக இந்தியா முழுவதும் 21 நாள் ஊரடங்கு விதிக்கப்பட்டுள்ளது.
    - **செய்தி துளிகள்**
        - உலக சாம்பியன் போட்டிகளில் ஒற்றையர் பிரிவில் தங்கம் வென்ற முதல் பெண் பி.வி.சிந்து ஆவார்.



We Shine Academy™

- 2013 ஆம் ஆண்டில் நடந்த முக்கியப் போட்டிகளில் இரண்டு தங்கமும், ஒரு வெண்கலப்பதக்கமும் வென்றுள்ளார்.

## சர்வதேச நிகழ்வுகள்

- **கொரோனா நோய்த்தொற்று: உலக அளவில் முதல் இடத்தை பிடித்தது அமெரிக்கா.**
  - அமெரிக்காவில் கொரோனா நோய்த்தொற்று (கோவைட்-19) காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியது. மேலும், ஒரே நாளில் 15 ஆயிரம் பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதை அடுத்து நோய்த் தொற்று ஏற்பட்டவர்களின் எண்ணிக்கை 83,672 ஆக அதிகரித்துள்ளது. இதையடுத்து சீனா மற்றும் இத்தாலியை பின்னுக்குத்தள்ளி அமெரிக்கா முதலிடைத்தை பிடித்துள்ளது.
  - **செய்தி துளிகள்:**
    - கொரோனா நோய்த்தொற்று பரவலால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்காக, 220 கோடி டாலர் (சுமார் ரூ.16,860 கோடி) நிதி ஒதுக்கீடு செய்வதற்கு டிரம்ப் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

## வர்த்தக நிகழ்வுகள்

- **கடன்களுக்கான மாத தவணைகளை செலுத்த 3 மாதங்கள் அவகாசம் வழங்கி ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.**

- தனிநபர்கள், பொது நிறுவனங்கள் வாங்கியுள்ள கடன்களுக்கான தவணைகளைச் செலுத்த 3 மாதங்கள் வரை வங்கிகள் கால அவகாசம் அளிக்கலாம்.
- வங்கிக் கடன் நிலுவைகளுக்கு 3 மாதம் கழித்து தவணை செலுத்த வங்கிகள் அனுமதிக்கலாம் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் தெரிவித்துள்ளார்.
- **செய்தி துளிகள்**
  - ரிசர்வ் வங்கி தலைமையகம் - மும்பை, மகாராஷ்டிரம், இந்தியா
  - ரிசர்வ் வங்கி துவக்கம் - ஏப்ரல் 1, 1935 ஆளுநர் சக்திகாந்த தாஸ்.

## திருக்குறள்

**குறள் எண் :** 150

**குறள் பால் :** அறத்துப்பால்

**குறள் இயல் :** இல்லறவியல்

**குறள் அதிகாரம் :** பிறனில் விழையாமை

**"அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்**
**பெண்மை நயவாமை நன்று."**

**விளக்கம் :**

ஒருவன் அறநெறியில் நில்லாமல் தீமைகளைச் செய்பவனானாலும், பிறன் மனைவியை விரும்பவில்லையென்றால், அ∴து அவனுக்கு மிகவும் நன்மையுடையதாகும்.

We Shine Academy ™